ஷீரடி செல்வம்

ஷீரடி சாய்பாபா பாடல்கள்

கலைமாமணி

டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

ஷீரடி செல்வம்

ஆசிரியர்

கலைமாமணி

டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

நெய்தல் பதிப்பகம்

நூல் விவரம்

- நூற்பெயர் :
  ஷீரடி செல்வம்
- ஆசிரியர் :
  கலைமாமணி
  டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
- உரிமை :
  எஸ். அம்சவள்ளி
  (W/o, Late. Dr. Ulunthurpettai Shanmugam)
- அச்சிட்டோர் :
  பிராசஸ் இந்தியா
  294, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
  இராயப்பேட்டை, சென்னை - 14.
- For Sales &
  Enquiries Contact : **S. AMSAVALLI**
  14, Amirtham Avenue, Bharani Street,
  Velacherry, Chennai - 600 042.
  Mobile : 9380297675, 9566042884
  email : ussankarram@gmail.com
  ussankarram@yahoo.com

- பதிப்பு : 2011
- பக்கம் : 72
- விலை : **45/-**
- நூலாக்கம் :
  டெலிபாய்ன்ட்
  16, சின்னப்ப தெரு,
  திருவல்லிக்கேணி,
  சென்னை - 5.
  Ph : 2848 3750

- காப்பிரைட் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றிப் பிரசுரிக்கக்கூடாது. தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

வெளியீடு : நெய்தல் பதிப்பகம்
எண் : 5, தங்கவேல் வைத்தியர் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை -5
Phone : 2848 3860
Mobile : 98415 37495
Email : neithalp@yahoo.in



சண்முகனார் சாஸ்வதமாய் வாழ்கிறார்!

— வாலி —

ஓர்
ஒப்புராயர் இல்லாச்
சுப்புராயச் செட்டியாரும்; பாற்-
கடலில் விளையாது - நற்றாயின்
குடலில் விளைந்த
அமிர்தம்
அம்மையாரும்;

ஆற்றிய தவத்தால்
அரும்பிய பிள்ளை;
தொன்மைத் தமிழ்த்தாயின்
தோளில் தொத்திய கிள்ளை;

என்
உழுவலன்பர்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்;
அருங்குண வதியாம்
அம்ச வல்லியாரின்
மஞ்சளில்;
மாங்கல்யத்தில்;
ஒளிவீசி நின்ற
ஒண்முகம்;

இதழ்களில்
இளம் புன்னகையை வைத்து
தன்வயம் எவரையும் ஈர்த்த
தண்முகம்;
நுவலும் பேச்சிலும்.
நோற்கும் பாட்டிலும்.
நுழைபுலம் துலங்க நிற்கும்
நுண்முகம்!

* * *

உருவம் குறில்;
உள்ளம் நெடில்; அவன்
உண்ணா
உயர்தமிழ் குடியிருக்கும் குடில்;
ஆறுமுகனையும்.
ஆனைமுகனையும்.
அதிகம் பாடியதாய்
ஆரைச் சொல்வது அவனை விடில்?

* * *

இவனால் தான்
இவன் பிறந்த
உளுந்தூர்ப்பேட்டை - தமிழ்
எழுந்தூர்ப்பேட்டை ஆனது;
இவன்
இயற்றிய
தனிப்பாடல்களாலும்;
திரைப்பாடல்களாலும்;

கானத்தமிழ்
கடல்கள் தாண்டி -
உலகத்தார்
உட்செவிக்குள் போனது!

* * *

வேங்கடவன்;
வேலவன்;
வேழமுகன்;
வாயு மகன்;
இன்னும்
இறையருள் பெற்ற.....

வேதாத்தரி;
விசிறி சாமியார்;

என
எந்த -
இறையும்;
இறையடியாரும் மிச்சமின்றி.....
இவனது -
பாடுபொருள் ஆயினர்; இவன்
பசுந்தமிழில் தோய்ந்து போயினர்!

* * *

கண்ணதாசன் போல் - இந்தக்
கவிப்பெருந் தகையும்....

பெரியாரிடமிருந்து
பெருமாளிடம் வந்தவன்;
தான்பெற்ற இன்பம் - இந்தத்
தரணிபெற வேண்டி -

ஆன்ம
அனுபூதியை -
வையம் உய்யுமாறு
வண்ணச் சிந்துகளில் தந்தவன்!

* * *

சுருங்கச்
சொன்னால்....

இருந்தமிழ்
இவனது
நாவகம் தன்னில்
சேவகம் செய்தது; இவன்
ஏந்திய
எழுதுகோல் வழி...
அது
அகிலமெங்கும்
அருட்பயிர் தழைக்க - இடை
அறாது ஞானமழை பெய்தது!

* * *

பக்திப்
பனுவல்களை மட்டுமல்ல; அவன்
பாடாத துறை
பாக்கியென்று எதைச் சொல்ல?

* * *

கோடம்பாக்கத்திலும் - அவன்
கோலோச்சிய மேதை;
'சீர்காழி' யும் -
'சிவாஜி' யும் -

அகத்தியனாயும்; சோழ -
அரசை ஆண்ட ராஜராஜனாயும் -
வெள்ளித்திரை
வீதியில்
உலா வர
உளுந்தூர்ப் பேட்டை தான்....

போட்டுக் கொடுத்தான்
பாட்டுப் பாதை!

* * *

அவன்
ககனம் ஏறினான் - தமிழ்
கானங்களை இங்குவிட்டு; அவன் -
இறந்தும்
இறவா திருப்பதை -
இசைக்கிறது
இசைத்தட்டு!

* * *

ஆம்;
உளுந்தூர்ப் பேட்டை சண்முகம் - எனும்
உயரிய கவிஞரேறு....
இசையொடு
இசையில் வாழ்கிறான்;
இசை தழுவும் - எண்
திசையில் வாழ்கிறான்!

* * *

ஏட்டிலும்
பாட்டிலும் - அவனது
ஏரார் புலமையினை
ஏந்தி நிற்கின்றன....

அவன்
அழகுற -
வடித்து வைத்த
வண்ணத்தமிழ்ச் சொற்கள்; அவற்றின்
வண்ணங்கெடாது காக்கின்றனர்
வாரிசாய் வந்த மக்கள்!

* * *

நல்ல மனைவி;
நல்ல மக்கள்;

நல்ல பெயரன்கள்;
நல்ல பெயர்த்திகள்;

இவர்களின்
இதயங்களில் மட்டுமல்ல -
எம்மனோர்
எண்ணங்களிலும்...

சண்முகனார் கீர்த்தி
சாஸ்வதமாய் நிற்கும்;
சமூகம் - அவனது
சிந்துகளிலிருந்து -
வாழ்வாங்கு
வாழ -
கருத்துகளைக்
கற்கும்!

* * *

—வாலி—

கலைமாமணி
டாக்டர். உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
ஒரு சிறு குறிப்பு

கவிஞர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம், விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டையில் 10-04-1933 ஆம் ஆண்டு பிறந்தார். தொடக்கக் கல்வியைச் சொந்த ஊரில் கற்று, பின்னர் உயர்நிலை, கல்லூரிக் கல்வியை திருச்சி, அர்ச்.சூசையப்பர் கல்லூரியில் பயின்று, சென்னை பச்சையப்பனில், டாக்டர் மு.வ. அவர்களின் மாணவனாக எம்.ஏ. முதல் வகுப்பில் 1960-ல் தேர்வு பெற்றார். எம்.லிட் ஆய்வும், டாக்டர் பட்ட ஆய்வும் மேற்கொண்டு பட்டங்கள் பெற்றுள்ளார். 1972 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும், அதன்பின் 1974 வரை, சென்னை சேலையூர் எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரியில் துறைத்தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றினார். 1975 முதல் 1978 வரை தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் மொழி பெயர்ப்புத்துறை உதவி இயக்குநராகப் பணியாற்றிய இவரை 1978-ல் அரசு தமிழ் பண்பாட்டு மைய இயக்குநராக நியமித்தது.

நாடறிந்த பாவலராகிய இவர் பெற்ற விருதுகள் பல. சென்னை ஆரோக்ய ஆசிரமம், இவரின் பக்திப் பாடல்களின் சிறப்பைப் பாராட்டி 'பக்த சிகாமணி' (1971) என அழைத்தது. தமிழ் சான்றோர்களின் அமைப்பான திருப்பனந்தாள் பாவலர் மன்றம், இவரின் சந்தக் கவிதைகளைப் பாராட்டி 'இசைக்கவியரசு' (1972) என்ற பட்டத்தை அளித்தது. 1975-ல் தமிழ்நாடு அரசு இயலிசை நாடக மன்றம் மிகச் சிறந்த விருதான 'கலைமாமணி' விருது தந்து தங்கப்பதக்கம் சூட்டி மரியாதை செய்தது. சென்னை உலகசமூதாய சேவா சங்கம் இவரின் தவப்பயிற்சிக்கு 'அருட்செல்வர்' (1983) என்ற பட்டம் சூட்டிற்று. சென்னை இலட்சுமி நாராயணா நிறுவனம், ஒலிப்பதிவுத்துறைப் பக்திப்

பாடல்களில் இவர் முன்னணி வகிப்பதைப்பாராட்டி 'தெய்வீகக் கவிஞர்' (1989) என்ற விருதினை உவந்தளித்தது. சென்னை திருவல்லிக்கேணி முருகனடியார்கள் சங்கம், இராஜா அண்ணாமலை மன்றத்தில் இறை இசை விழா நடத்தி இவருக்கு 'பெருங்கவிஞர்' (1994) எனும் பெருமையைத் தந்தது.

கவிஞர் உ.பே.ச. அவர்கள், அகவுணர்வுப் பாடல்கள், சமுதாயப் பாடல்கள், தேசிய உணர்வுப் பாடல்கள், மொழிப்பெயர்ப்பு பாடல்கள், பக்திப் பாடல்கள், தன் உணர்வுப்பாடல்கள், கவியரங்கப் பாடல்கள், நிகழ்ச்சிப் பாடல்கள் என பல்வேறு துறைகளில் இயற்றிய பாடல்கள் ஐயாயிரத்தை எட்டும் இவர் எழுதிய மகாகவி பாரதியாரின் வரலாற்றை யாழ்ப்பாணம் 'ஈழநாடு' இதழ் தொடர்கட்டுரையாக வெளியிட்டுள்ளது. இவரின் பக்திப் பாடல்கள் மூவாயிரத்திற்கும் மேல் இசைப்பதிவாகி முன்னணிப் பாடகர்களால் பாடப்பெற்று ஒலி நாடாக்களாகவும், குறுந்தகடுகளாகவும், உலகெங்கும் உலா வருகின்றன, மக்களை மகிழ்விக்கின்றன.

இவர் இருபதுக்கும் மேலான சிறந்த வடமொழி தோத்திரப்பாக் களை தமிழில் மொழிப்பெயர்த்துள்ளார். அவற்றுள் பம்பாய் சகோதரிகள் பாடிய T.Series தயாரிப்பில் வெளிவந்த ஸ்ரீ வேங்கேடச சுப்ரபாதம், வெளியிடப்பட்ட அன்றே ஒரு லட்சம் ஒலி நாடாக்கள் விற்றதனால் 'தங்கத்தகடு' (Golden Disk) விருதினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

வானொலி, தொலைக்காட்சி, தனியார் தொலைக்காட்சி, இசைமேடைகளில் இவரது பாட்டும், பேச்சும், அவ்வப்போது இடம்பெறும், திரை உலகிலும் இவர் பல பாடல்களை இயற்றியுள்ளார்.

தமிழ்நாட்டின் பெருங்கவிஞரான இவர் தனது மனைவி திருமதி. அம்சவள்ளியுடன் 48 ஆண்டுகள் இல்லறம் நடத்தி மக்கட் செல்வம் பெற்று, தனது இறுதிக் காலங்களை ஆன்மீகத்தில் பெரும் ஈடுபாடுடன் கழித்தார். உலகத் தமிழர்களின் மனதில் குடிகொண்ட அவர் தனது 71 ஆம் வயதில் 24-08-2003ல் இறைவனடி சேர்ந்தார்.

நெய்தல் பேசுகிறது....

புரத்தில் பிறந்தவர் மகாகவி - ஆம்
எட்டைய புரத்தில் பாரதியார்.
பட்டியில் பிறந்தவர் இரு கவிஞர்
சிறு கூடல்பட்டி கண்ணதாசன் - வடுகப்பட்டி வைரமுத்து
கோட்டையில் பிறந்தவர் சுந்தரம்
பாட்டுக்கோட்டை - யாம்
பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
அரங்கத்தில் பிறந்தவர் வாலிப வாலி
ஸ்ரீரங்கம் என்னும் திருவரங்கத்தில்
குடியிலே பிறந்தவர் ஒரு கவிஞர்
ஆலங்குடி சோமு
பேட்டையில் பிறந்ததோ பன்முகம்
இசைப் பண் முகம் - அவர்தான் எங்கள்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
தந்தை சுப்புராயர் தாயார் அமிர்தம் - என்றும்
சிந்தை யெல்லாம் பாட்டு அமிர்தம்
எந்தை தமிழுக்கு சண்முகம் அம்சம் - துணைவி
வந்தார் அம்ச வள்ளியாம் அம்சம்.

இறைவனைத் துயில் எழுப்ப சுப்ர - பாதம்
இம்மக்கள் விழித்திட எழுப்பிட இசைப் - பாடல்
எழுப்புவது இவர்வேலை யானால்.

இவர் ஊரென்ன - உளுந்தூர்ப்பேட்டை
பேட்டை துள்ளி ஆடி எழ வைக்கும் பேட்டை

ராஜபாட்டை யாம் உளுந்தூர்ப்பேட்டை
தமிழகத்து பாட்டு தமிழ்ப்பேட்டை

மு.வ.வின் மாணவராம் சண்முகம்
முதன்மையான பேராசிரியராம் சண்முகம்
மொழி பெயர்ப்பு உதவி இயக்குநர் சண்முகம்
தமிழ் பண்பாட்டு மைய இயக்குநர் சண்முகம்
பதவிகளுக்கும் பட்டங்களுக்கும் பிடித்ததொரு சண்முகம்
எங்கள் உளுந்தூர்ப்பேட்டை டாக்டர் சண்முகம்

பெருங்கவிஞர் சண்முகம்
தெய்வீகக் கவிஞர் சண்முகம்
இசைக் கவியரசு சண்முகம்
பக்த சிகாமணி சண்முகம்
கலை மாமணி சண்முகம்
அருட் செல்வர் சண்முகம்

இவையெல்லாம் கவிதை அடைமொழிகள் அல்ல!
உளுந்தூர்ப்பேட்டை மைந்தனின் உன்னதப் பட்டங்கள்

தமிழுக்கு ஒரு உ.வே.சா. - இசை
மெட்டுக்கு ஒரு **உ.பே.ச.** - இவர்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் - மட்டுமல்ல
உலகம் **பே**சும் **ச**ண்முகம் - உ.பே.ச.

சுப்ரபாதம் தந்தவிருது தங்கத்தகடு
எப்பவும் இசைக்கும் உந்தனது குறுந்தகடு
மக்களின் இதயம் மகிழ்ந்து தங்கும்தகடு.
திக்கெலாம் ஒலிக்கும் தேமதுர தமிழ்த்தகடு.

இத்தகைய மாபெரும் கவிஞரின் பாடல்கள்
சித்தமாய்ப் பதிப்பித்து வெளியிடும் நெய்தல்

செய்ததொரு மாபெரும் பாக்கியம், புண்ணியம்
செய்யவைத்த பெருமை **பிரீத்திகாவைச்** சாரும்.
வாய்ப்பளித்த **சாதகப்பறவை சங்கரைச்** சாரும்.
சேய்போல பாடல்களைச் சேமமுறக் காத்திட்ட
உ.பே.ச. குடும்பம் உன்னதமாய் வாழும்.
இனி பேச வேண்டியதிலை உ.பே.ச பண்பாடும்

இனிய மழலைப் பாட்டு
கனிய இயற்கைப் பாட்டு
பணிய பரமன் பாட்டு
துணிய எழுச்சிப் பாட்டு
உணர காதல் பாட்டு
உயர முன்னேற்றப் பாட்டு
மலர குடும்பப் பாட்டு
வளர அறிவுப் பாட்டு
பற்பல தெய்வப் பாட்டு
அற்புதத் தலைவர் பாட்டு
உருக உள்ளப் பாட்டு
மருகா தெளிவுப் பாட்டு
பன்மொழிப் பெயர்ப்பு பாட்டு
பண்டித வித்தகப் பாட்டு
நிப்பாட்டு - நிப்பாட்டு
என்ன பாட்டு இல்லை.
அனைத்தும் சண்முகம் பாட்டு
அத்தனை பாடலும் தந்ததைப்
பதிப்பித்துத் தந்தது நெய்தல்
தமிழுலகுக்கு உ.பே.ச. வின் தரமிகு பாடல்களை
அமிழ்தாய்ச் சுவைத்திட அன்புடன் வெளியிடுகிறோம்.

பொருளடக்கம்

ஷீரடி செல்வம் 15

ஷீரடி செல்வம்

ॐ

1. ஷீரடி செல்வோம்

பரமாத்ம ஜோதிரூபனே பகவானே ஸாயி
எளியேனின் பாடல் ஏற்றுங்கொள்ளுஸாயி
பரமாத்ம ஜோதி ரூபனே
சரணாகதி என்றால் அபயம்தரும் ஸாஸி
சாந்தி வேண்டும் ஸாயி சாந்தமூர்த்தி ஸாயி
காமதேனு ஸாயி கலபதரு ஸாயி
புருஷோத்தம ஸாயி போற்றி!போற்றி ஸாயி

பரமாத்மா ஜோதி ரூபனே....

வாருங்கள் செல்வோம் பாபாவிடம்
ஸாயி வாழும் இடம்

மனோஹரம் அது மதுராம்ருதம்
ஸாயி வாழும் தலம்

பூங்கா வனம் நெஞ்சில் நீங்கா மணம்
ஸாயி நாதன் குணம்

காண்போம் ஷீரடி பாபா தரிசனமே

2. ஆரத்தி

உன்னிடம் ஓடிவந்தேன் - பாபா
ஷீரடி தேடிவந்தேன்
கண்ணின் ஒளிமணி நீயே
கரு ணையின் மறுஉரு நீயே
ஜெய் ஜெய் ஸாய் பகவான் - பாபா
ஷீரடி ஸாய் பகவான்!

ஸாயிராமா ஸாயிராமா ஸாயிராமா ஸாய்ராம்

முடிந்தது இரவு விடிந்தது பொழுது
நித்திரை நீங்கிடுவாய்
யோக நித்திரை நீங்கிடுவாய்

பக்தட்ாகள் வந்தனர் பாராய்
உத்தமா எழுந்துநீ வாராய்
நித்தமும் உனைத் துதித்தோம்
எங்கள் - சித்தத்திலே வைத்தோம்!

ஸாயிராமா ஸாயிடராமா ஸாயிராமா ஸாய்ராம்

தீயவை யாவையும் திரி யாய் ஆக்கியே
நம்பிக்கை நெய்யில் இட்டோம்

பக்தி தீபத்தில் எரிய விட்டோம்

துர்க்குணம் நீக்கிடு பாபா
நற்கதி காட்டிட வாராய்
தாயினும் இனியவனே - மாபெரும்
வானினும் உயர்ந்தவனே

ஸாயிராமா ஸாயிராமா ஸாயிராமா ஸாய்ராம்
வந்ததும் வளர்ந்ததும் வாழ்ந்ததும் உன்னால்
வருவதும் உன்னாலே

எதையும் பெறுவது நின்னாலே!

சொந்தமும் பந்தமும் நீயே
தந்ததும் கொண்டதும் நீயே
ஸாயி மகராஜா - ஷீரடி
பாபா மகராஜா

ஸாயிராமா ஸாயிராமா ஸாயிராமா ஸாய்ராம்

மத்தள மேளம் கொட்டுது கேளாய்
மங்கள நேரம் இதே

கற்பூர ஆரத்தி காட்டுகிறோம்

குழந்தைகள் நாங்கள் பாபா
பிழைகள் பொறுத்திடு பாபா
பதமலர் சரணடைந்தோம் - உந்தன்
நிழலினிலே அமர்ந்தோம்!

ஸாயிராமா ஸாயிராமா ஸாயிராமா ஸாய்ராம்!.......

3. நாச்சே நாச்சே

உன்னை எண்ணும் போதே உள்ளம் துள்ளும்

எங்கள் பாபா சாயி பாபா
உன்னை எண்ணும் போதே உள்ளம் துள்ளும்

உன்பேர் சொன்னால் உல்லாஸமே
உலகெங்குமே உன் சாம்ராஜ்யமே
அன்பு பாபா ஸாயிநாதா
உன்னை எண்ணும் போதே உள்ளம் துள்ளும்

ஷீரடி வந்தால் சீராகுமே
கோணட்ல எல்லாம்இனி நேராகுமே
துன்பம் ஓடும் இன்பம் கூடும்.
உன்னை எண்ணும் போதே உள்ளம் துள்ளும்

4. ஜெகதீசஹரே சிவசம்போ

உன்பாதம் அதே சிவலோகம்
கைலாயம் சுகபோகம்

ஷீரடி வாழும் என்கருநாதா
உன் திருப்பார்வை வேண்டுமே

ஸ்ரீ பாபா அருள் தாராய்

உனையன்றி வேறே துணை ஒன்றும் இல்லை

கண்பாராய் கலி தீராய்

கை தரவே நீ வாராய் (உன் பாதம் அதே)

5. ஷீரடி மகேஷ்

மற்றவர் உண்ணவே மரம் பழுக்குமே
அப்படியே பசு பால்சுரக்குமே

ஸாயிராம் உன் தயாகமும் நெஞ்சம் மறக்குமோ
பக்கிரி உருவினில் பரம்பொருள் நீயே
அக்கரை சேர்ந்திடும் கப்பலும் நீயே

பொன்னான பாதம்
எந்நாளும் மறவோம்

கண்ணான உந்தன்
கருணையை மறவோம்

மண்ணாள வந்தாய்
விண்ணாளும் அரசே

பண்ணோடு தாளம்
பாமாலை தருவோம்

பொன்னான பாதம் எந்நாளும் மறவோம்

என்னை நீ ஏற்றிடு என்றும் நீ காத்திடு

6.

ஷீரடி வந்தால் ஜெயம் தானே

ஷீரடி என்றால் நலம் தானே

ஷீரடி வாழும் குருநாதன்

இல்லைஎன சொல்லாத குணசீலன்

எங்கள் பாபா அவர் தங்க பாபா
எங்கள் பாபா அவர் அன்பு பாபா

7. வானம்பாடி

ஒரு வானம் பாடி போல வந்தார்
கானம் பாடு என்றார்
இந்த பூமி வாழ நம்மைத் தேடி
ஸாயி நாதர் வந்தார்

(ஒரு வானம் பாடி)

கீதை ஓதும் மாயன் போல
ஞான போதம் தந்தார்
பேதம் யாவும் நீங்க என்று
வாழ்ந்து காட்ட வந்தார்
நாளும் நாளும் நாடும் அன்பர்
பாவம் தீர்க என்றார்
ஏழை மக்கள் வாழ்வு காண
வாரி வாரித் தந்தார்

(ஒரு வானம் பாடி)

ஸாயி நாமம் பாடப் பாட
வேத மந்த்ரம் ஆகும்
ஸாயி பாதம் நாட நாட
சாயும் துன்பம் யாவும்
ஸாயி ராமன் கோலம் காண
திவ்ய போதை ஏறும்
ஸாயி க்ருஷ்ணன் சந்நி தானம்
அமுதம் மதுரம் ஆகும்.

(ஒரு வானம் பாடி)

8. அபய மொழிகள்

நீ என்னை நோக்கினால்
நான்.... உன்னை நோக்குவேன் என்றாய்

நீ ஓரடி முன் வந்தால்
நான்... ஏழடி வருவேன் என்றாய
ஷீரடி பாபா,....

நீ சொன்ன மொழிகள்...
நேரடி அநுபவம் ஆகக் கண்டேன் - உன்
காலடி கண்ணில் ஒற்றிக் கொண்டேன்
பாபா.... ஸாயி பாபா
பாபா.... ஸாயி பாபா (நீ என்னை)

நானிருக்க பயமேன் என்றாய் - ஒரு
நாளும் பயமில்லை பாபா
நீ இருக்க கவலை இல்லை - உன்
நிழல் பட்டால் ஓடும் தொல்லை
பாபா.... ஸாயி பாபா
பாபா... ஸாயி பாபா (நீ என்னை)

நீயே அடைக்கலம் என்றால் - ன்
கல்லறை பேசும் என்றாய்
கூடவே வருவேன் என்றாய் - என்கால்
தூசியும் பதில் சொல்லும் என்றாய்

ஆம் எங்கள் ஸாயி நாமம் - இங்கு
ஓர்முறை சொன்னால் போதும்
பேய் பிசாசுகள் ஓடும் - எங்கள்
பிணிகள் யாவும் தீரும்
பாபா.... ஸாயி பாபா
பாபா... ஸாயி பாபா (நீ என்னை)

எந்தன் பக்தன் இல்லம் - அங்கு
என்றும் குறையாது செல்வம்
பஞ்சம் பட்டினி இல்லை - அதை
பார்த்துக் கொண்டிருப் பதில்லை
என்றே நீ சொன்ன வாக்கு - அது
எப்போதும் எங்களைக் காக்கும்
இரவும் பகலும் உன் நினைவு - ஒரு
தவறுதல் நேராத கனிவு

பாபா.... ஸாயி பாபா
பாபா.... ஸாயி பாபா
பாபா..... ஸாயி பாபா
பாபா... ஷீரடி..... பா...பா!

9. சமரச ஞானி

எந்நாளும் பொன் நாமம்
இனிக்கும் மணக்கும்
சொன்னாலே தன்னாலே
சுகம் பிறக்கும்
சாயி அன்பில் சாயும் துன்பம்
ஞானியின் பார்வை பேரின்பம்
நாளும் நாளும் ஆனந்தம்

(எந்நாளும்)

சாயி தந்த அருள்உப தேசம்
யாவர்க்கும் ஏற்ற சமரச மார்க்கம்
ஷீரடி தன்னை நினைத்தால் போதும்
கோரிக்கை யாவும் நிறைவேறும்
வாழ்க்கை செழிக்கும் வளமாகும் - நம்
வாழ்க்கை செழிக்கும் வளமாகும்

(எந்நாளும்)

கண்ணனன் சக்தி த்வாரகா மாயி
கல்லாறைக் குள்ளும் பேசுவார் சாயி
அன்னையைப் போலே தன்னையே தருவார்
விண்ணின் ஜோதி சுடர் விளக்கு
சாயி இருக்க பயம் எதற்கு - நம்
சாயி இருக்க பயம் எதற்கு

(எந்நாளும்)

10. காக்கும் கரங்கள்

யார்க்கும் உதவும் காக்கும் கரங்கள்
அதோ என் எதிரில் தெரிகின்றது
கேட்கும் போதெலாம் கொடுப்பதற்கென்றே
தோன்றாத் துணையாய் வருகிறது

மழை பொழிகிறது
உயிர் குளிர்கிறது

ஸாயி... ராமா உன்னைப் போலே வள்ளல் யாரையா
பேரைச் சொன்னால் போதும் எங்கள் அல்லல் தீருதையா
ஸாய்ராம்... ஸாய்ராம்... ஸாய்ராம்.....ஸாய்ராம்... (யார்க்கும்)

பாறை நடுவில் தாகம் தீர்க்கும் ஊற்றை வரவழைப்பாய்
பாதி இரவில் கானகம் அதனில் தேநீர் கொடுத்திடுவாய்
சாயும் நேரம் தோளில் தாங்கி சாந்தி ஊட்டிடுவாய்
தக்க தருணம் பக்கம் வந்தே நிற்கதி காட்டிடுவாய்

ஒளி தெரிகிறது
வழி புரிகிறது

ஸாயி.... ராமா உனைப்போலே சற்குரு யாரையா
சரணம் என்றால் அபயம் என்னும் சாமி நீதானய்யா (யார்க்கும்)
அடங்காக் குதிரை கீழே தள்ளினும் ஆபத்து இல்லை ஐயா

அன்பர்கள் துயரை வருமுன் அறிந்து அகன்றிடச் செய்வாய் ஐயா
விளங்காப் புதிராய் வேஷம் தரித்தே விரைந்து நீ வருவாயே

வேண்டிய தெல்லாம் கிடைக்கச் செய்தே வேதனை தீர்ப்பாயே

சுமை குறைகிறது
மனம் நிறைகிறது

ஸாயி.... ராமா உன்னைப்போலே தாயும் இல்லை ஐயா
ஆரியம் அற்புதம் மாயாலீலைகள் ஆண்டவள் நீதான் ஐயா
(யார்க்கும்)

11.

என்
நெஞ்சின் வலியை இறக்கி வைத்தாய் - நீ
நீடு வாழ்கவென வாழ்த்துரைத்தாய்
அஞ்சா தேஎன கைகொடுத்தாய் - அந்த
எமனையும் போஎன துரத்தி விட்டாய்

ஸாயி மகராஜா நமஸ்காரம் - எனை
வாழவைத் தவரே நமஸ்கரம்

அண்டிவந் தோர்க்கெல்லாம் அருள் புரிந்தாய் - ஓர்
ஆபத்துக் காலத்தில் காக்க வந்தாய்
என்றும் என் இதயத்தில் தங்கிவிட்டாய் - இனி
ஏழேழ் பிறவியும் துணை வருவாய்
ஸாயி குருநாதா நமஸ்காரம் - எனின
வாழவைத் தவரே நமஸ்கரம்

முன்பும் அன்பர்க்குத் தொண்டு செய்தாய் - கதை
முடிந்ததும் உதவுவதற்கு வந்திருந்தாய்
இன்றும் நாளையும் எதிர் வருவாய் - இனி
என்றும் எப்போதும் நீ எங்கள் தாய்

ஸாயி மாதாவே நமஸ்காரம் - எனை
வாழ வைத்தவரே நமஸ்கரம்

நமஸ்காரம் என் நமஸ்காரம்

12.

அவர் சொன்ன சொல் ஒவ்வொன்றும் மந்திரம்
அது சொல்லியது சொல்லியவாறேயே பலித்திடும்

புயல் காற்றும் அடங்கும்
பெரும் கனலும் ஒடுங்கும்
மழை பெய்யெனப் பெய்யும்
சற்று நில்லென நிற்கும்
அதிசயம்.... அற்புதம்...
ஐம்... பூதமும் அவர் ஏவல் கேட்கும்

இது நடந்தது உண்மை
ஸாயி மஹானின் மகிமை
நம் பாபாவின் மகிமை
ஷீரடி பாபாவின் மகிமை
ஸாய்ராம்... ஸாய்ராம்...ஸாய்ராம்... ஸாய் ராம்... (அவர்)

ஈரமில்லாப் பாறையிலும் ஊற்றைஉண் டாக்கும்
எண்ணெய் இல்லா விளக்கதுவும் நீரால் எரியும்
பாரிலுள்ள உயிர்கள் எல்லாம் நானே என்னும்
பாபாவின் இதயத்துள் யாவும் அடங்கும்
இது நடந்தது உண்மை
ஸாயி மஹானின் மகிமை
நம் பாபாவின் மஹிமை
ஷீரடி பாபாவின் மஹிமை
ஸாய்ராம்... ஸாய்ராம்... ஸாய்ராம்... ஸாய்ராம்... (அவர்)

பிள்ளை இல்லாக் குறைஅவர் சொல்லால் தீரும்
பெறவேண்டும் ஆண் என்றால் அதுவும் கூடும்
மறைந்த ஊர் திரும்ப வந்து கருவாய் மாறும்
மங்கையர் தம் துயர்நீங்கி மகிழ்ச்சி சேரும்

இது நடந்தது உண்மை
ஸாயி மஹானின் மகிமை
நம் பாபாவின் மஹிமை
ஷீரடி பாபாவின் மஹிமை
ஸாய்ராம்... ஸாய்ராம்... ஸாய் ராம்... ஸாய் ராம்... (அவர்)

இறந்தபின் மூன்றாம் நாள் வருவேன் என்றார்
ஏசுவைப்போல் பாபாவும் மீண்டும் வந்தார்
இருந்தநாள் வரையிலும் சிறந்திருந்தார்
நிரந்தரமாய் நம்நெஞ்சில் குடி புகுந்தார்
ஸாய்ராம்... ஸாய்ராம்...ஸாய்ராம்...ஸாய் ராம்... (அவர்)

13.

நேயம் அன்று உடலெடுத்தது
த்யாகம் அதற்கு உயிர் கொடுத்தது
பத்திரி என்னும் சிற்றூர் தன்னில் பரமனின் அவதாரம்
பக்கிரி உருவில் மக்களுக் குணர்த்த இறைவனின் திருக்கோலம்

எங்கும் அமைதியின் அலங்காரம்
ஆஷா பாபா பிறந்தாரே
மாந்தர் சீர்பெற வந்தாரே

ஆவோ........ஸாயி
ஷீரடி........ஸாயி
பாபா........ஸாயி
வாழ்கவே........ஸாயி
ஆவோ........ஸாயி
ஷீரடி........ஸாயி
பாபா........ஸாயி
வாழ்கவே........ஸாயி

இந்துவாகப் பிறந்தது
முஸ்லிமாக வளர்ந்தது
கந்தல் ஆடையை உடுத்தது
கடவுளாய்க் காட்சி அளித்தது - நம்
மடமையை நீக்க விரைந்தது (ஆவோ)

ஷீரடி என்னும் ஊரைத் தேர்ந்தது
பார் முழுதும் அதைத் தேட வைத்தது
பண்டிதர்ப் பாமரர் செல்வந்தர் ஏழைகள்
ஒன்றாய்ச் சேர்ந்திடும் விந்தையைச் செய்தது
அன்பினை நெய்தது- நம்
அகந்தையை கொய்தது (ஆவோ)

எங்கோ தீயில் விழுந்த குழந்தையை
இங்கே தீயில் கைவிட்டு எடுத்தது
அன்பர்கள் உடல் பொருள் ஆவியைக் காத்தது
அன்புக்காகத்தான உயிரையும் ஈந்தது
அன்புக் காகவே இன்றும் வாழ்கின்றது (ஆவோ)

இகத்தின் சுகங்கள் யாவும் ஈந்தது
பரத்தில் திளைத்திடும் பக்குவம் தந்தது
தாயைப் போலே தண்ணருள் பொழிந்தது
தந்தையாய்க் கடிந்து தடுத்தாட் கொண்டது
என்றும் எப்போதும் துணையாய் நின்றது (ஆவோ)

எருமையும் வட மோட்சம் பெற்றது
புலியும் அவரால் புனிதம் பெற்றது
தாமலடம் ராஜதம் சரண் அடைந்தது
சாந்தம் பொங்கித் தவழ்ந்தது வழிந்தது
சத்தியச் சுடரொளி நித்தமும் பரவுது (ஆவோ)

தொழுநோ யாளியின் தொண்டுகள் ஏற்றது
ஏழைக் கிழவி தந்த ரொட்டியை உண்டது
மருகும் எளியோர்க்கு உருகிக் கனிந்தது
பெருகும் அடியார்கள் துயரம் களைந்தது

த்யாகமே உன்பெய்ா ஸாயி பாபாவா
நேயமே நீதான் ஸாயி பாபாவா
இறைவா நின்உரு ஸாயி பாபாவா
என்றும் எங்கும் ஸாயி பாபாவா
நெஞ்சின் துடிப்பு ஸாயி பாபாவா (ஆவோ)

வாழ்கவே ஸாயி வாழ்கவே ஸாயி வாழ்வே ஸாயி

14.

துனிஎனும் அக்கினி வளர்ந்தது
உதிஎனும் சாம்பல் எடுத்து
விதியையும் மாற்றிடும் ஞானி
கரையினில் சேர்த்திடும் தோனி
அக்கரையினில் சேர்த்திடும் தோணி

எங்கள் ஷீரடி பாபா....
செய்திட்ட அற்புதம்....
ஆயிரம் ஆயிரம் கோடி- அந்த
அதிசயக் காவியம் பாடி
ஆனந்தக் கூத்துக்கள் ஆடி- நம்
அண்ணலைப் போற்றுவோம் கூடி - கொண்டாடி (எங்கள்)

காலடியில் கங்கைநதி பொங்கிடவே வைத்தாரே
மாலவனின் அம்ஸமென சொல்லாமல் சொன்னாரே
வானதியை தலைமுடியில் வாரி முடித்தாரே
தானும் அந்தச் சிவபெருமான் என்றே சிரித்தானே (எங்கள்)

கையைவிட்டுப் போனபொருள் தன்னாலே கிட்டிவிடும்
கண்பார்வை போனாலும் மீண்டும் ஒளி வந்துவிடும்
ஊமைக்கும் பேச்சுவரும் ஊனமும் சீராகும்
பாபா மனது வைத்தால் எல்லாமே நேராகும் (எங்கள்)

புலியும் விட்டுவிடும் தீயும் பட்டுவிடும்
புத்திகெட்டுப் போனாலும் நற்கதி வாய்த்து விடும்
மூழ்கும் கப்பலதும் எப்படியோ கரை சேரும்
பாபா மனதுவைத்தால் பாவமெல்லாம் தூளாகும் (எங்கள்)

செத்தாரை எழுப்பிடுவார் சிறைவாசம் தவிர்த்திடுவார்
நித்திரையில் தோன்றிடுவார் நெருப்பின்றி புகைபிடிப்பார்
நத்தியவர் இச்சையெல்லாம் அக்கணமே தீர்த்திடுவார்
நான் இருக்க பயம் உனக்கு ஏன் என்று கேட்டிடுவார் (எங்கள்)

15. பரமாத்மா

ஸாய் ராமா எங்கள் ஸாய் ராமா
ஷீரடி ஸாயி பரமாத்மா

கொடுப்பதற் கென்றே பிறப் பெடுத் தாய்நீ
துதித்திட வந்தோமே ஸாய்ராமா
நினைத்தால் போதும் நேரினில் வந்தே
அணைத்திடும் தெய்வம்நீ ஸாய் ராமா

ஸாய் ராமா எங்கள் ஸாய் ராமா
ஷீரடி ஸா பிரமாத்மா

சத்தியம் காகத் பத்ரியில் பிறந்தாய்
சிவனின் அம்ஸம் நீ சாய் ராமா
தாயும் தந்தையும் ஞானியர் ஆனார்
ஃபக்கீர் வளர்த்தாரே ஸாய் ராமா (ஸாய்ராமா)

மதங்கள் யாவும் கடவுளைக் காட்டும்
மார்க்கங்கள் என்றாய் ஸாய்ராமா
மசூதி அமர்ந்து சமரஸம் நாட்டிய
மஹாத்மா நீ அன் றோ ஸாய் ராமா (ஸாய் ராமா)

அன்பால் வந்தவர் அனைவரும் உன்னிடம்
தஞ்சம் ஆனாரே சாய் ராமா
நொந்தவர் வாழ்வில் இன்பம் பொங்கிட
சந்தம் காவல்நீ ஸாய் ராமா (ஸாய்ராமா)

த்வாரகா மாயி துனிஎனும் அக்கினி
என்றும் எரியும் ஸாயி ராமா
ஏற்றிய தீபம் இன்றும் சுடரும்
வாட்டம் தீர்ப்பரய் ஸாய் ராமா (ஸாய் ராமா)

பயிருக்கு மழைபோல் உயிருக்குத் துணைநீ
பாபா எங்கள் ஸாய் ராமா
அதிசயம் ஆயிரம் அற்புதம் நிகழ்த்தும்
குருஉனை மறவோம் ஸாய் ராமா (ஸாய்ராமா)

கோபம்கொண் டாலும் குணவான் நீதான்
மோஹதத்தை நீக்கு ஸாய்ராமா
தீரா நோயும் தீரும் உன்னாலே
பாபாஸாய்ராம் ஸாய் ராமா (ஸாய் ராமா)

புலியும் உன்னிடம் சரணடைந் ததுவே
கதிநீ தந்தாய் ஸாய்ராமா
விதியையும் மாற்றிட வல்லவன் நீயே
பாபா ஸாய்ராம் ஸாய்ராமா (ஸாய் ராமா)

ஷீரடி வாளா ஸாய்ராமா
சிதானந்த ரூபா ஸாய் ராமா
கற்பகத் தருவே ஸாய் ராமா
கலியுக வரதா ஸாய் ராமா (ஸாய் ராமா)

16. உதயம்

சாயி நாமமே ஜீவ கீதமே சத்தியமான வேதமே
சாயி நாமமே ஓம் நாதமே தத்துவ ஞான போதமே
சாயி நாமமே தேவ கானமே தாகம் தீர்த்திடும் பானமே
சாயி நாமமே சாந்தி யோகமே நாளும் நிம்மதி சேருமே

ஸாய்ராம் ஸாய்ராம்
ஸாய்ராம் ஸாய்ராம்

உதயமாகியது- ஒளி
உதய மாகியது
பத்திரி என்னும் சிற்றூரினிலே
முத்திரைத் தங்கம்
மோனச் சிங்கம்
உதயமாகியது - நம்
இதய மாகியது (உதயமாகியது)

பரம ஞானியவன்
பக்கிரி உருவில்
அவதாரம் கொண்டான்
பிறந்தது முதலாய்
நடந்து நடந்து
ப்ரம்மத்தைக் கண்டான்
குருவின் அருளால்
யோகம் கூட
இறைவனை வரவேற்றான்
ஹரிநா மத்தால்
அட்டமா சித்தி
யாவும் அவன் பெற்றான் (உதயமாகியது)

பதினாறு வயதில்
பிணிகளை போக்கும்
மருத்துவம் ஆன மஹான்
உதிஎனும் சாம்பலால்
விதியையும் மாற்றி
விந்தைகள் புரிந்து நின்றான்
ஷீரடி தன்னில் திருவடி பதித்து
சிந்தை கவர்ந்தானே
நேரடியாய் அந்த தெய்வமே வந்து
தாயாய் துணை நின்றது. (உதயமாகியது)

17.

மனதை மயக்கும் ப்ருந்தாவனம்
ஷீரடி பாபாவின் நந்தவனம்

(மனதை)

முத்துப் புன்னகை பற்றி இழுக்குது
பித்தம் பிடித்திடுதே
எட்டுத் திக்கிலும் சித்தன் அவன் புகழ்
கொட்டி முழக்கிடுதே
தனதென ஒருநிலை அகலுது அவன்பதம்
சரணென அலையுது கவலைகள் கலையுது

(மனதை)

அன்பெனும் சண்பகப் பூ மலரும்
சந்தன மணம் அவன் த்யாகம் சொல்லும்
கொன்றையும் துளசியும் கொலுவிருக்கும்
என்றும் அவன் சோலை நிழல் கொடுக்கும்

(மனதை)

கண்ணனும் இராமனும் இவன்தானோ
கபீர்தாஸ் ததத்குரு இவன்தானோ
அநுமன் அவதாரம் எடுத்தானோ
அயன், அரன் என அருள் கொடுத்தானோ

(மனதை)

18. பாபாவின் பவனி

ஜெய்! சத்குரு ஸாயிநாத் மஹராஜ்ஜி ஜே!

இந்த இரவு இனிய இரவு ஏற்றுக தீபம்
சாவடி நோக்கி பாபா வந்திடும் வண்ண ஊர்கோலம்!

நாதஸ்வர நாதங்கள்
மத்தளமேள தாளங்கள்
தால, கந்தால், சப்ளா, கஞ்சிரா
வீணை இன்னிசை ராகங்கள்
சேர்ந்து பஜனை பாடுங்கள்

மஹல் ஸாபதி கரம் பற்றிட
பாஸாகேப் குடை பிடித்திட
பவனி வருகிறார் - பாபா- பவனி வருகிறார்

(இந்த இரவு)

வாண வேடிக்கை வர்ண ஜாலங்கள்
வரும்வழிஎலாம் பட்டு விரிப்புகள்
இரு மருங்கிலும் சாமரம் வீசிட
அழகு மாதர்கள் நடனம் ஆடிட

'ஸ்யாமகர்ணா' குதிரை சென்றிட
தேரும் பல்லக்கும் தொடர்ந்து வந்திட
தாத்யா பட்டீல் தாங்கிப் பிடித்திட
தங்கச் சரிகை சால்வை போர்த்திட

நீண்ட கஃபினி ஆடை அணிந்து
சிட்கா சிறுதடி அக்குளில் வைத்து

பவனி வருகிறார் பாபா பவனி வருகிறார்

(இந்த இரவு)

19.

எங்கள் ஷீரடி பாபா
லீலைகள் ஆயிரம்
ஆயிரம் ஆயிரம் கோடி
வாருங்கள் போற்றுவோம் கூடி
ஆனந்தக் கூத்துக்கள் ஆடி
கொண்டாடி - பண்பாடி- இசைபாடி

(எங்கள்)

காலடியில் கங்கைநதி பொங்கிவரச் செய்தாரே
மாலவனின் அம்ஸம் என சொல்லாமல் சொன்னாரே
வானதியை தலைமுடியில் வாரி முடித்தாரேஞ
தானும் சிவன்என காட்டி
மகிழ்வூட்டி - நகைகாட்டி - நலம் கூட்டி

(எங்கள்)

கையைவிட்டுப் போனபொருள் தன்னாலே கிட்டிவிடும்
கண்பார்வை போனாலும் மீண்டும் ஒளி வந்துவிடும்
ஊமைக்குப் பேச்சுவரும் ஊனமும் சீராகும்
புயலும் கூட அடங்கும்
பகை ஒடுங்கும் - கொடும் விலங்கும் - நடு நடங்கும்

(எங்கள்)

20.

ஆனந்த சங்கீதம்
தேனாகும் ஸாய் நாமம் - எங்கள்
தேவனின் புகழ் பாடுவோம் - அந்த
தூயவன் பேர் கூறுவோம்

ஸாயி ஸாயி ஸாயி ஸாயி
ஸாயி ஸாயி ஸாயி ஸாயி (ஆனந்த)

ஞானி நினைவாலே மேனி தள்ளாட்
நாம ஸ்மரணமே நாவில் நின்றாட
கால்களும் நர்த்தன பாவம் கொண்டாட
கண்களும் மகரந்தக குளமாக மாற

கைகொட்டி கைகொட்டி ஆடுவோம் வருக
கசிந்துருகி கசிந்துருகி பாடுவோம் வருவ (ஆனந்த)

அல்லாவும் ராமனும் வேறல்ல என்றார்
அவரவர்கள் தெய்வத்தை போற்றிடுக என்றார்
எல்லாமே அவன் செயல் இருக்கின்ற நாட்கள்
நல்லவராய் வாழ்ந்திடவே தூவிடுக பூக்கள்

ஆயிரம் சூரியன் தோன்றிடும் ஆனால்
அஞ்ஞான இருள்நீக்க குரிவன்றோ வேண்டும்
ஸாயி சத்குருவின் பாதார விந்தம்
சரணம் என்போர்க்கு சகலமும் சொந்தம்

கைகொட்டி கைகொட்டி ஆடுவோம் வருக
கசிந்துருகி கசிந்துருகி பாடுவோம் வருக (ஆனந்த)

21.

ஓடி முன்வைத்தால் ஏழடி எதிர்வருவார்
ஷீரடி பாபா ஸாயி பகவான்
தேவையை முறையிட்டு திருவடி தொழுவோர்கள்
பாவங்கள் போக்கும் சர ஸாயி பகவான்
ஸாயி பகவான்.... ஸாயி பகவான்

ஏழை, பணக்காரர் எல்லோரையும் நோக்கும்
எளிய திருஉருவம் ஸாயி பகவான்
வாழ வழியின்றி ஆழக் கவலையினால்
வாடுவோர் துயர் நீக்கும் ஸாயி பகவான்
ஸாயி பகவான்.... ஸாயி பகவான்

ஜாதி மதங்கள் எனும் பேதங்கள் கடந்து வந்து
யாவரும் ஒன்றென்ற ஸாயி பகவான்
தான் ஒரு ஹிந்துவாய் முஸ்லிமாய் காட்சிதந்து
சமயப் பொதுமை கண்ட ஸாயி பகவான்
ஸாயி பகவான்... ஸாயி பகவான்.... (ஓரடி)

பக்கிரிபோல் திரிந்து பிச்சை பாத்திரம் ஏந்தி
துக்கம் துடைக்கவந்த ஸாயி பகவான்
அக்கரை யோடுஅவர் பக்கத்தில் செல்வோருக்கு
ஆசிகள் தந்தருளும் ஸாயி பகவான்
'ஸாயி பகவான்... ஸாயி பகவான்' (ஓரடி)

ஸாய்ராம் ஸாய்ராம் சரணம் சரணம் என்றே
பாடுவோர் நாவனிலே ஸாயி பகவான்
தேனாக குழைந்திருப்பார் நாத சங்கீதம் எனும்
தெய்வீக மழை நடுவில் ஸாயி பகவான் (ஓரடி)

22.

சாயி மாதாஎனச் சொன்னால் அது போதுமே - நமை
சாரும் துயர் யழவும் பறந்தோடுமே
சாயி நாமம் போற்றுவோம் சஞ்சலத்தை ஓட்டுவோம்
சந்நிதியை மெழுகி அழகு வண்ணக் கோலம் தீட்டுவோம்
(சாயிமாதா)

ஒரு மனதாய் தொழுதுநின்றால் திருமணம் கூடும் - அவன்
திருப்பள்ளி வாசலிலே செல்வங்கள் சேரும்
தாய்மைக்குப் பெருமைதரும் சந்ததி பிறக்கும் - அவன்
தயவிலே நம் குடும்பம் தூய கோயிலாகி விடும்
(சாயிமாதா)

காமதேனு கற்பகத்தரு சாயி நாதனே - அவன்
கருணை மழை காலமெல்லாம் நம்மைக் காக்குமே
கூடிநின்று வாழந்துவோம் கும்மிகொட்டி ஆடுவோம் - அந்த
குரு நமக்கு அருள் கொடுக்க வரங்கள் வேண்டி - பாடுவோம்
(சாயிமாதா)

23.

நீ இருக்கும் இடமெல்லாம் பிருந்தாவனம்
நித்தம் நித்தம் மலர்கின்ற பூங்காவனம்
தாயிருக்க பிள்ளைக்கு குறையும் உண்டோ - உன்
சந்நிதி தர்பாருக்கு நிகாம் உண்டோ....

சாயி மகராஜ்... சாயி மகராஜ்
சத்தியத்தின் பேரொளியே.... சாயி மகராஜ் (நீ இருக்கும்)

எண்ணெய் இன்றி விளக்கெரியும் உன்கைராசி - இன்று
என் உயிரில் சுடர்கின்றாய் அதுஉன் ஆசி
கண்ணிலே புன்னகையை காட்டும் வடிவே
மன்னவனே மஹானே ஸாயி மகராஜ்

சாயி மகராஜ்.... சாயி மகராஜ்
சாந்தத் திருஉருவே... சாயி மகராஜ் (நீ இருக்கும்)

பரமாத்ம ரஸம் பருக, பக்கம்ட வந்தேன் - நின்
பார்வையில் மதிமயங்கிய சொக்கி நின்றேன்
ஹரி நாம சங்கீர்த்தனம் பாடுகின்றேன் - ஒரு
ஆவேஸம் மெய்சிலிர்க்க ஆடுகின்றேன்

சாயி மகராஜ் சாலி மகராஜ்
சாலி மகராஜ் (நீஇருக்கும்)

அன்புக்கு அணைபோட யாரும் இல்லை - உன்
அருளினை எடைபோட எவரும் இல்லை
சங்கநிதி பதுமநிதி நீதான் சொத்து - மனச்
சாந்தியை தருகின்ற பாண்டிமுத்து - தென் பாண்டிமுத்து

சாயி மகராஜ்... சாயி மகராஜ்
சந்தனத்தின் மென்மனமே...சாயி மகராஜ் (நீ இருக்கும்)

24.

எங்கள் ஸாயிபாபா... மங்கள ரூபா
ஸத்வகுண போதா... ஸாந்தஸ் வரூபா (எங்கள்)

உந்தன் பேரைச் சொன்னால் துன்பம் எல்லாம் தீரும்
உன்னை எண்ணிச் சென்றால் நன்மை எல்லாம் கூடும்
கந்தல் ஆடைக்குள்ளே கடவுளைக் கண்போம்
அன்பின் தின்ன்ம உன்னை நெஞ்சில் வைத்துக்
கொண்டோம் (எங்கள்)

கர்மவினை தீர கருணையே போதும்
காலடி ஸ்பரிஸம் கல்லும் கனி யாகும்
தர்மம் வாழ வந்தாய் சமத்துவம் கண்டாய்
தாள் மலர் மதுரம் வாழ்வு சுக போகம் (எங்கள்)

இருந்த நாள் எல்லாம் எளிமையே கோலம்
இல்லாத போதும் உன் கல்லறையும் பேசும்
விருந்து படைத்தாய் மருந்தும் கொடுத்தாய்
வேகத்தைக் குறைத்தாய் விவேகத்தை வளர்த்தாய்
பேரன்பு ஞானத்தாய் (எங்கள்)

ஜெய: ஜெய ஸாயி
ஜெய ஜெய பாபா
ஷீரடியின் நாதா
தேவாதி தேவா (எங்கள்)

25.

ஸாயி சத்குரு திருப்பாதம் - நால்
வேத ஸாகரம் சங்கீதம்
பேரில்லை ஊரில்லை பேர்தருவான்
ஏழைக்கும் இரங்கி அருள் புரிவான்

(ஸாயி)

கந்தல் ஆடை கிழவன் என்றாலும்
கவலை தீர்க்கும் இளைஞன் அவனாகும்
கல்லும் கனியாகும் முள்ளும் மலராகும்
நம்பிக்கை வைத்தார் நலம் பெறுவார்
அதன் பிறகுப் பணிந்திடுவான் ஆபத்தில் காத்திடுவான்
ஷீரடி ஸாயிராம் கோடி செல்வம் வழங்கிடுவான்

(ஸாயி)

தானும் புலியும் வந்து விளையாடும்
பாம்பின் விஷமும் ஒன்றும் செய்யாது
த்வாரகா மாயி ஏழைப் பக்கீரின்
தோற்றத்தில் தெய்வம் பேசியது
இந்துஎன அவன்சிரிப்பான் அல்லாஹூ அக்பர் என்பான்
ஷீரடி ஸாயிராம் பேதமெல்லாம் போக்கிடுவான்

(ஸாயி)

26. அற்புத ஞானி

உயிர் நாதமே ஷீரடி குருநாமமே - இனிய
அருட்போதமே ஸாயியின் திருப்பாதமே (உயிர் நாதமே)

பக்கிரி உருவினிலே அற்புத ஞானி அவன்
அஷ்டமா சித்திகளும் பெற்ற வித்தார சித்தனவன்
அக்கரை சேர்த்திடும் ஓர் பொன் தோணி அவன்
பர்மாத்ம தேனமுது
காமதேனு கற்பகமாய் கனிந்திருக்கும் கருணைமழை
(உயிர் நாதமே)

தேவன் நடந்தஇடம் ஆனந்த ப்ருந்தாவனம்
பாலையில் சோலை அவன் நல்ல பண்பாளன் அன்பாளன்
கல்லறைக் குள்ளிருந்து காட்சி அளிக்கிறான்
கண்கண்ட கடவுள் அவன்
கலியுகத்தின் நலிவெல்லாம் களைந்துவிடும் துறவிஅவட்ன

ஷீரடி பாபா வந்தார் இதோ
எதை வேண்டினும் கொடுக்க வந்தாரே
பொருள் தந்தார் புகழ் தந்தார்
அருளும் தருவார் அவர்போல் தருவார் யாருள்ளார்
எதுவும் தரும் வள்ளல் ஏது இனி அல்லல்
பெரு ஞானம் தரும் குருநாதன் அவர் (உயிர் நாதமே)

27. குழந்தை மனம்

பாபா...

என் பால் வழியும் முகம்பார்த்தால்

தீதே தீதேதும் வராது

சிறுமை ஏதும் சேராது

காலையில் விழித்தவுடன் காண்கிறேன் - நின்

கருணையில் குளித்துஉளம் களிக்கிறேன் - ஸாயி

(பாபா)

ஆன்மிக சாம்ராஜ்யம்

அதற்குளோர் எல்லையில்லை

அனைத்துலகும் அனைத்துயிரும் அடக்கம் - அங்கு

நினைத்ததெல்லாம் நினைத்தபடி நடக்கும் (பாபா)

அந்த தேவலோக பாரிஜாதம்

பூமியிலே மலர்ந்ததுவோ

காமதேனு கற்பகமும் வந்ததுவோ - எங்கள்

சாயிமகான் உருவினிலே வளர்ந்ததுவோ

மான்கட்டி பால்நிலவில்

மகிழ்ந்து துள்ளி ஓடுதட்ல போல்

சாயிமுனி குழந்தைமனம் தவழ்ந்ததுவோ - ஓம்

சாந்தி எனும் சத்தியமாய் நிறைந்ததுவோ சாயி (பாபா)

ஸாயி எங்கள் ஸாயி ஸாயி எங்கள் ஸ்வாமி.

28. பல உருவத் திருமேனி

மல்லிகை கமகமக்கும் நின்தேகம்
மந்திரம் உன் நாமம் நால் வேதம்
அல்லல் அகற்றுகின்ற அருள் ரூபம்
ஆனந்த சாகர அவதாரம்

ஸாய்ராம்.... ஸாய்ராம்... (மல்லிகை)

ஸாயி என்றாலே உலகத் தாய்
பாபா என்றாலே தனித் தந்தை
தாயும் தந்தையுமாய் நீ வந்தாய்
காலடி கங்கையினை பொங்க வைத்தாய்

எங்கோ நெருப்பில் விழுந்தவனை
இங்கே இருந்தே காத்திடுவார்
கங்கை தன்னைக் கால்விரலில்
பொங்கச் செய்தே காட்டிடுவார்.

ஸாய் ராம்.... ஸாய் ராம்... (மல்லிகை)

பாமர னும்திருந்தும் அற்புதங்கள்
பக்தர் முக்திபெற அதிசயங்கள்
கோபம் கொண்டாலும் ஏற்றங்கள்
வாழ்வில் உனைக் கண்டால் மாற்றங்கள்

ராமன் ஹநுமன்(ஆதி) சிவனாக
பால க்ருஷ்ணன் என உருக்காட்டும்
தேவன் வந்தாயே ஷீரடிக்கு
பால்அபி ஷேகம் உந்தன் திருவடிக்கு

ஸாய்ராம்.... ஸாய்ராம்..... (மல்லிகை)

பாபாவின் காலடியே
பரமபதம் வைகுந்தம்
ஷீரடியே கைலாயம்
தெய்வீக வானுலகம்
ஸாய் நாதா
ஸாய் நாதா (பாபாவின்)

பகதரைக் காத்திடும் பரமதயாளா
பாதகமலம் சரணம் அய்யா
சித்தம் தெளிய வைத்திடு தேவா
திருவடி சரணம் சரணம் அய்யா
பக்குவம் தந்து பக்கத்தில் சேர்ப்பாய்
சத்குரு நாதா சரணம் அய்யா
ஸாய் நாதா ஸாய்ராமா ஹரேராமா ஹரே கிருஷ்ணா
(பாபாவின்)

ஆசை பாசம் யாவும் உன்மேல்
மாற்றிக் கொள்ள அருள் புரிவாய்
வேஷம் த்வேஷம் யாவும் விட்டு
நேசம் கொள்ளும் நிலை தருவாய்
மாயை நீங்கி தாயுன் மடியில்
மகிழ்ந்திருக்கச் செய்திடுவாய்
ஸாய் நாதா ஸாய் ராமா ஹரே ராமா ஹரே கிருஷ்ணா
(பாபாவின்)

29.

ஓம்... ஓம்... ஓம்... ஓம்... ஓம்... ஓம்...

ஓமெனும் நாதம் உன் பாதமே
தேனினும் இனியது உன் நாமமே
பக்தர்கள் தேடும் பரந் தாமனே
ஷீரடி பாபா ஸாய் ராமனே
குருநாத னேஉன் சேவை எங்கள் பாக்கியமே (ஓமெனும்)

கனவில் வருவாய உணர்த்திடுவாய்
கவலைகள் யாவும் துரத்திடுவாய்
வேறோர் வடிவெடுப்பாய்
விளையாடல் நிகழ்ந்திடுவாய்
உனதருள் வேண்டி நின்றால் உதவிக் கரம்
கொடுப்பாய் (ஓமெனும்)

கணபதி ராமனாய் காட்சி திருவாய்
மாருதி யாகவும் தோன்றிடுவாய்
சத்ய நாராயணர்
நரசிம்மர் உருவெடுப்பாய்
தத்தாத் ரேயர் என தரிசனம் தந்திடுவாய் (ஓமெனும்)

30. பாபாவின் பவனி

ஊர்வலமே நல்ல ஊர்வலமே
ஷீரடியில் ஸாயி நகர்வலமே
மேளம் தாளம் அதிர்ந்திடுமே
சாவடி நோக்கியே நகர்ந்திடுமே (ஊர்வலமே)

நீண்ட கஃப்னி உடை அணிந்து
தோளில் துண்டு தவழ்ந்திடவே
சிறுதடி அக்குளில் சொருகி வைத்து
வருவோர் எவரையும் சொக்கவைத்து
வீணை ஒலி இழைத்திடவே

வாணவெடி ஸாயி மஹான்
அழகுத் தேரும் அசைந்திடுமே (ஊர்வலமே)

குதிரையும் அவரை தொடர்ந்து வரும் - அவர்
கூடவே பல்லக்கு ஆடி வரும்
மகல்லா பதியின் கரம் பிடிப்பார்
பாபு ஸாகேப் குடை பிடிப்பார்
நடையெல்லாம் துணி விரிப்பார்
நாட்டியங்கள் பார்த்திருப்பார்
திருவடியில் அபிஷேகம்
ஆரத்தி ஆராதனை (ஊர்வலமே)

31.

பொன்விளையும் உந்தன் புன்சிரிப்பில்
பூமலரும் உந்தன் துனி நெருப்பில்
ஸாய்ராம் என்றால் ஜெயமே ஜெயமே
பாபாவின் பேர் சொல்வோம்
தீவினை தீர்ந்திடும் செல்வம் செழிக்கும் (பொன்விளையும்)

தவாரகா மாயியே ஏழைஎன் கோயிலே
தாயாக தாலாட்டும்
யாகமோ தீ தான் செஞ் சுடர் ஜோதியோ
என்றென்றும் உந்தன் நினைவின் சின்னம்
ஸாய் நாதனே (பொன் விளையும்)

பூஜைகள் செய்குவோம் போற்றியே பாடுவோம்
திருநாமம் விருந்தாகுமே
தீபமும் பாபா உன் விளையாடலே
நீரால் எரிந்தது என்றும் ஒளிததுாம்
மருந்தாகுமே (பொன் விளையும்)

32.

பூமாரி பொன்மாரி மொழிகின்றது
யாழோசை குழலோசை கேட்கின்றது
ஆயர்பாடி கோபாலன்
ஷீரடி வந்து சேர்ந்தானா
என்னென்ன மாயங்கள் கண்ணனின் ஜாலங்கள்
கும்மிகள் கொட்டிய பாடுங்களே

பாபா புகழை பாடுங்களே
ஆனந்தக் கூத்து ஆடுங்களே (பூமாரி)

சீறும் புயல் காற்று தென்றலாய் மாறும்
தீயும் ஓயும் சென்றது மீளும்
பட்டது துளிர்க்கம் தொட்டது துவங்கும்
அற்புதச் சித்தரும் வந்தாரே
பக்கிரி உருவில் நின்றாரே (பூமாரி)

எண்ணெய் இல்லாமல் தீப்பந்தங்கள் எரியும்
எங்கோ நடப்பது இங்கே புரியும்
பேய்கள் ஓடும் பிணியாகவும் விலகும்
பாபா அருளாலே பாவங்கள் கரையும்
வித்தகச் சித்தரும் வந்தாரே
வேண்டியதெல்லாம் தந்தாரே (பூமாரி)

33.

ஷீரடியும்... ஒரு... பண்டரிபுரம்
பாண்டுரங்கனின்... திவ்ய க்ஷேத்திரம்
ஸாயி நாதனும் அந்த கோவிந்தனே
மாய லீலையில்... கோபாலனே (ஷீரடியும்)

கணபதிஎனும்... காவல் காரரை
சகஸ்ர நாமங்கள்... பாடச் செய்தவன்
கீர்த்தனைகளில்... தன்னை மறப்பவன்
கேட்ட போதெலாம்... கொடுத்து மகிழ்பவன் (ஷீரடியும்)

கோபம் கொள்ளுவான்.... ஆட்கொள்ளவே
வேலை வாங்குவான்.... வினைதீரவே
சாபம் போன்றசொல்... பாபம் நீக்கிடும்
சாயி என்றதும்.... பாதுகாத்திடும் (ஷீரடியும்)

வேலைக்காரியின்... பாடல் கேட்டதும்
ஞானசூத்திரம்... விளக்கமாகிடும்
கீதை போதனை... வேறு பாஷையில்
சாகஸங்களில்... அந்தக் கண்ணனே (ஷீரடியும்)

ஸாய் ராம்....
ஸாய் ராம்....
ஸாய் ராம்....
ஸாய் ராம்....

34.

ஒரு பக்கம் இனிக்கும் மறுபக்கம் கசக்கும்
அதிசய வேப்பமரம் - அதன்
அடிநிழல் அமர்ந்தே தவம் செய்யும் அவர்தான்
யாரது அன்பின் உரு

யாரவர் பேரென்ன ஆதி மூலம் அது
யாதென அறிதற் கில்லை
அந்தணப் பிள்ளையை மூஸ்லீம் வளர்த்தாராம்
வெங்குஸா குரு என்பார்

ஸாய்ராமின் சரிதம்...!
மிகமிகப் புனிதம்...!
கேட்போர்க்கு அபயம்...!
அநுக்ரஹம் வரதம்...!

ராமனோ சிவனோ ஆஞ்ச நேயரோ
தத்தாத் ரேயர் அவரோ
ஆமெனச் சொல்லுவார் அவரவர் உருவிலே
தோன்றிடு வார் இவரே

ராம தீர்த்தத்தின் சீடர் கபீர் என
ஒரு நாள் உரைப்பாரே
அங்கிங் கெனாத பரப்ப்ரம்மம் நானென
உரக்கச் சிரிப்பாரே

ஸாய் ராமின் சரிதம்...!
மிக மிகப் புனிதம்...!
கேட்போர்க்கு அபயம்...!
அநுக்ரஹம் வரதம்...!

35.

உந்தன் கண்கள் கருமை நிற மேகம்
அது கருணை மழையாக மாறும்
அந்த கங்கை காலடியில் பொங்கும்
அன்புக் கரங்கள் வ்ழங்கவரும் என்றும் (உந்தன்)

விண்ணும் மண்ணும் உன்முன் வந்தே
ஏவல் கேட்கும் பாபாவே
எண்ணும் முன்னே கண்முன் காட்டும்
தேவன் நீதான் பாபாவே
உனக்கீடு யாரும் இல்லை ஷீரடி பாபாவே
மனக்கோயில் வாழும தெய்வம் நீதானே பாபாவே (உந்தன்)

த்வாரகா மாயி(யின்) அக்கினி குண்டம்
என்றும் நின்றே எரியும்
நீதரும் உதியால் நோய்கள் தீரும்
பாவம் பொடியாய் போகும்

நாளும் விந்தை பல புரிவாய்
ஓடிவந்தருள்வாய்
நலம் தருவாய் (உந்தன்)

36.

ஜெய் ஸாயி பாபா
ஷீரடி பாபா
நீ தானே நெஞ்சின்
நிறைவாகும் பாபா

(ஜெய்ஸாயிபாபா)

பொன்னான உந்தன் புகழ்பாட வந்தேன்
உன்நாமம் என்றும் எந்நாவில் செந்தேன்

(ஜெய்ஸாயிபாபா)

காலையில் கதிர்நீ கண்ணின் மணிநீ
மாலை நிலாவே பூங்காற்றே வாவா
கோடையில் மழைநீ மழைக்குக் குடைநீ
தோன்றாத் துணை நீ தோழனே பாபா

(ஜெய்ஸாயிபாபா)

உன் திருப்பாதம் வற்றாத ஊற்று
உன் சந்நிதானம் பேரின்ப பாட்டு
உன் பார்வை போதும் என்குறை தீரும்
சந்தன மலரே நண்பனே பாபா

(ஜெய்ஸாயிபாபா)

37. அற்புதங்கள்

குருப்ரம்மா குருவிஷ்ணு குருதேவ் மஹேஸ்வரா
குருஸாக்ஷாத் ப்ரப்ரம்ம ஸ்ரீகுருவே நமஸ்காரம்
(குருப்ரம்மா)

நீரால் விளக்கெரிப்பாய் நெருப்பின்றி புகைபிடிப்பாய்
குதிரையை வரவழைப்பாய் நல்ல குழந்தைப் பேறளிப்பாய்
ஸாயிராம் எங்கள் ஸாயிராம் நீசெய்யும் அதிசயங்கள்
ஆயிரம் கோடி என்பேன் உன் அற்புதம் என்னவென்பேன்
கற்பகம் என்பதோ சித்தனே நீ காத்திடு
(குருப்ரம்மா)

தொழுநோயும் தீரும் குருடும் விழிகள் பெறும்
நெருப்பில் விழுந்த பிள்ளை நின் கைகள் எடுத்துவிடும் - சுடு
நெருப்பில் விழுந்த பிள்ளை நின் கைகள் எடுத்துவிடும்
கங்கையும் பொங்கிடும் கால்விரல் தூண்டிடும்
கண்ணனும் ராமனும்நீ சிவனும் ஹநுமனும் நீ
தன்னையே தந்திடும் அருளாளன் நீயன்றோ
(குருப்ரம்மா)

38. சித்த புருஷர்

அவர்செய்த அதிசயம் அற்புதம் ஆயிரம்
ஷீரடி பாபாவின் வாழ்வொரு காவியம் (அவர்செய்த)

நெருப்பின்ற புகைக்குழல் பற்றவைப்பார்
கொதிக்கின்ற பானையில் கைவைப்பார்
தொலைந்த குதிரையை வரவழைப்பார்
தொழுநோய் எனினும் தீர்த்துவைப்பார்

தண்ணீரை ஊற்றி விளக்கெரிப்பார்
சாம்பலை தந்தே பிணி தவிர்ப்பார்
தொலைவில் நடப்பதை அறிந்துகொள்வார்
துன்பம் நீக்கி கைகொடுப்பார் (அவர்செய்த)

குழந்தைகள் மனத்தில் தங்கிடுவார்
எளியவர் இடத்தில் வந்திடுவார்
செல்வர்கள் சூழ்ந்திட சென்றிடுவார்
பிச்சை எடுத்தே உண்டிடுவார் (அவர்செய்த)

தரமுடி யாதது ஒன்றில்லை
தாமே வேண்டும் என்று சொல்வார்
துறவி வடிவில் ஒரு தெய்வம்
தொழுவார் பெறுவார் பெரும் செல்வம் (அவர்செய்த)

39. சமரஸ ஞானி

ஒருபோதும் மறவாதே
குரு நாமம் ஜபிக்கத் தயங்காதே
ஷீரடியின் தெய்வம் ஸாயி பகவான்
நேரில் வந்து பேசும் ஸாயி பகவான்

வேண்டுவதைத் தருவான் ஸாய் மகராஜ்
நம் - வினைதீர்க்க வருவான் ஸாய் மகராஜ்
(ஒருபோதும்)

நானிருக்க பயமேன் என்றுசொல் வாரே
சோர்வுதனைத் தீர்க்க தோள்கொடுப் பாரே
ஸாயிராம் என்றாலே சந்தோஷம் சேரும்
தஞ்சம்நீ என்றாலே மங்களங்கள் கூடும்
(ஒருபோதும்)

உதிப்பொடியைக் கொடுத்தே உயிர்காக்கும் தோழன்
விதி அதையும் மாற்றும் அதிசய தேவன்
ஜாதி மத பேதங்கள் ஏதுமில்லா நாதன்
சரணமென்று வந்தார்க்கு அபயம்தரும் சீலன்
(ஒருபோதும்)

40. நிலவு முகம்

நிலவோ மலரோ குளிர்முக வதனம்
என் நெஞ்சினிலே பூமழை தூவும் (நிலவோ)

திருவே உந்தன் ஷீரடி வந்தேன் - குரு
ஸாயி நாதன் ஆலயம் கண்டேன் (ஸாய்ராம்)
இருளை அகற்றும் கதிரவன் போல் விழிகள் மலருதே
எனை அருகில் வந்து பாரென்றே குரல் ஒலிக்குதே
மெய் சிலிர்க்குதே
(நிலவோ)

வாவா என்றே வலக்கரம் அழைக்கும் - நீ
வாழ்க எனவே வாழ்த்துக்கள் அளிக்கும்
கால்மடக்கி அமர்ந்த கோலம் கவலை போக்கிடும் - உன்
பாதார விந்தம் அது தாகம் தீர்த்திடும் (நிலவோ)

41. வருகை

விருத்தம் :

பிறருக்கு உதவவே நதிகளின் பெருக்கம்
பிறருக் காகவே மரங்கள் பழுக்கும்
பிறருக்கு ஊட்டவே பசுக்கள் சுரக்கும்
பிறருக் கென்பதே வாழ்க்கையின் நோக்கம்

கொடிய கோடையிலே
குளிரவைக்கும் மழையாக
கும்மிருட்டுப் பாதையிலே
மின்னலின் ஒளியாக
பாலை வழியினிலே
த்ராட்சை வனமாக
பாபாவின் வருகை – (இங்கு)
பரவச மாகுதம்மா

தர்மம் தவிக்கும் நிலை சத்தியம் சாய்ந்த நிலை
கர்ம வினை கழுவ கருணைநதி பெருகுதம்மா
பட்டமரம் துளிர்க்குதம்மா தொட்டதெல்லாம் துவங்குதம்மா
பாபாவின் வருகை பரவசமாகுதம்மா!

இழந்ததை வரவழைப்பார் இல்லார்க்கு வாழ்வளிப்பார்
குழந்தைப் பேறளிப்பார் கொடுநோயைத் தீர்த்துவைப்பார்
கண்ணிலா மாந்தருக்கு கண்மணியாய் ஒளிதருவார்
கைகாட்டி அருள்புரிவார் கலிதீர்க்க வந்தாரம்மா!

பல்லவி :

ஷீரடி என்றாலே – எங்கள்
சிந்தை குளிருதம்மா
பாபாவின் வருகை பரவசமாகுதம்மா!

42. சத்திய சமுத்திரம்

ஸாயி எனும் சத்திய சமுத்திரத்தில்
நீராடி மகிழுவோம் வாருங்களே
சந்தனம் மணக்கின்ற சண்பக வனத்திலே
சற்றே உலாவுவோம் வாருங்களே (ஸாயி எனும்)

இதயப் பசிநீக்க இளமாங் கனிஉண்டு
இளைப்பாறி இருப்போம் வாருங்களே
உதயக் கதிர்வீசும் உச்சிமா மலைமேலே
ஓமெனும் நாதம் கேளுங்களே (ஸாயி எனும்)

அரும்பி வழிந்திடும் அன்பு ப்ரவாஹத்தில்
அமுதுண்டு களிப்போம் வாருங்களே
விரும்பும் பேரின்ப கரும்பின் சாறதனை
வேண்டுமட்டும் சுவைக்க வாருங்களே (ஸாயி எனும்)

பிறவிக் கடல்கடந்து கரையேறிக் கடைத்தேற
பெரிய தெப்பம் உண்டு வாருங்களே
குருவடி வாகிவந்து குவலயம் காக்கின்ற
திருப்பாதம் சரணடைவோம் வாருங்களே (ஸாயி எனும்)

பொங்கியே வழிகின்ற அன்பு ப்ரவாஹத்தில்
புத்தமுது உண்போம் வாருங்களே
மங்களம் புன்னகை மதுவுண்டு மெய்சிலிர்த்து
வண்டாய்த் திரிவோம் வாருங்களே (ஸாயி எனும்)

43. அவர் செய்த அற்புதங்கள்

ஸ்ரீ ஸாயியைப் பணிக
ஸாயியை நினைக
சாந்தி நிலவட்டும்
தாயினும் இனிய யோகியின் அருளால்
தர்மம் வளரட்டும் - சம
தர்மம் வளரட்டும் - ஷீரடி (ஸாயியை)

ஆயிரங் காலத்தில் ஒருமுறை மலரும்
அற்புதத் தாமரையாம் - அவர்
அன்புத் தேவையாம்
நோயினை நீக்கவும் நொடியினில் காக்கவும்
ஸாய்ராம் மந்திரமாம் - அவர்
பார்வை சந்தனமரம் - ஷீரடி (ஸாயியை)

குழந்தையை காக்க எரிகின்ற நெருப்பில்
கொடுத்தார் தன் கரமே வினை தடுத்தார் அதிசயமே - ஒரு
தொழு நோ யாளியை தொண்டன் ஆக்கியதும்
அவரின் தந்திரமே - அது
கருணைச் சித்திரமே

ராம நவமியையும் ரம்ஸான் விழாவையும்
இணைத்தது அவர் திறமே
எல்லா உயிரிலும் நானே இருக்கிறேன்
என்பது அவர் குணமே - ஷீரடி (ஸாயியை)

உதித்திரு நீற்றால் கதிகொடுத் தருளி
ஊருக்கு உபகாரி - இஞ்சிப்

பொடியால் வினைகளைப் பொடிப்பொடியாக்கிய
அதிசய மெய்ஞ்ஞானி

நானிருக்கையிலே பயமேன் என்னும்
நம்பிக்கை நங்கூரம்

சோர்வு நீக்கியே வாழ்வு கொடுத்திடும்
ஸாய்ராம் திருநாமம் - ஷீரடி (ஸாயியை)

44. குரு வந்தனம்

வந்தனம் குருவந்தனம் தலை தாழ்ந்தனம்
எங்கும் ஷீரடி ஸாயி பாபாவின் நாமமே
வினை தடுத்திடும் பகைதுரத்திடும் ஆயுதம் (வந்தனம்)

எந்த நிலையிலும் மனத்தை அடக்கியே
ரம்மிய மாக வைத்திருக்கவும்
இனிமைப் பேச்சுடன் தனிமைத்யானமும்
எல்லோருக்கும் உதவும் எண்ணமும்
தந்து காப்பது உந்தன் திருவருள்
ஸாயி நாதனே
துன்பம் தீர்ந்தது இன்பம் சேர்ந்தது
துவாரகா மாயி ஸ்வாமியே (வந்தனம்)

கந்தல் ஆடையில் வந்த கடவுளே
கருணை பொழியும் மாமழைச் சாரலே
கல்லும் கனியாகும் முள்ளும் மலராகும்
அன்பின் அமுதூறும் உனது பார்வையே
நின்ற திருக்கோலம் சாய்ந்த திருக்கோலம்
உந்தன் திருக்கோலமே
பண்பின் காவியம் பாச ஓவியம்
என்றும் என் நெஞ்சில் ஸாயிராம் (வந்தனம்)

45. நீயே துணை

நீஇன்றி எனக்கு யார்துணை
பாபாவே உனக்கு யார்துணை
ஏழை எந்தன் ஜீவனே
தாயே ஸாயி நாதனே

(நீ இன்றி)

அடிக்கும்போது அணைக்கும் கரங்கள் உன்னதல்லவா
துடிக்கும்போது கண்ணின் நீரைத் துடைக்கும் அல்லவா
நினைக்கும்போது நேரில் தோன்றும் தெய்வம் அல்லவா
அழைக்கும்போது ஓடிவந்து அருளும் அல்லவா
என்நிதி உன் சந்நிதியே
நிம்மதி உந்தன் காலடியே

(நீ இன்றி)

தர்ம மூர்த்தி தயவின் நேர்ந்தி சொல்லி மூடியுமா
அமுத சுரபி வழங்கும் போது அள்ளி முடியுமா
கடலைத் தேடும் நதியைப்போல குருவை நாடினேன்
நினைந்து நினைந்து நெகிழ்ந்துநெகிழ்ந்து உருகிப் பாடுவேன்
சத்தியத்தின் சங்கமமே
காமதேனு கற்பகமே

(நீ இன்றி)

46. ஜெய் ஜெய் பாபா

ஏழை செல்வர் யார்என் றாலும் ஏற்றிச்செல்லும் தோணி
ஜாதிய சமய பேதம் இன்றி தழுவிக்கொள்ளும் ஞானி
பாதை மாறிப் போகும்போது நேர்வழி கூறும்
நீதி தேவன் பாபா நமது காவல் தெய்வம் ஆகும்
(ஏழை செல்வர்)

குரு அவர் நினைவினில் உருகிட உருகிட
கவலைகள் யாவும் விலகிடுமே
திருவடி சரணென தொழுதிட தொழுதிட
தீரா வினையும் தீர்ந்திடுமே
எனைத்தேடி ஓடிவந்தால்
ஏழடி வருவேனே
எனை நோக்கு அது போதும்
அஞ்சாதே என்றார்
ஷீரடி பாபாவே (ஏழை செல்வர்)

வழிபடும் அடியவர் குலநலம் மனநலம்
உணவுடை யாவும் தருவேனே
இரவிலும் பகலிலும் அவர்களின் நினைவொடு
குரல் கொடுப்பது நான் தானே
கல்லறைக் குள்ளேயும் நான்
வாழ்கிறேன் நம்பிடு
காலடிப் புழுதியும்
பேசுமே என்றாரே
ஷீரடி பாபாவே (ஏழை செல்வர்)

கலைமாமணி
டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
அவர்களின் கவிதை படைப்புகள்

1. விநாயகனே வினை தீர்ப்பவனே!
2. நீ அல்லால் தெய்வம் இல்லை - முருகா! (பாகம் - 1)
3. முருகா! முத்துக்குமரா! (பாகம் - 2)
3. அன்பே சிவம்!
4. திருப்பதி மலை வாழும் வெங்கடேசா!
5. சாமி திந்தக்கத்தோம் தோம்!
   ஐயப்பன் பாடல்கள் (பாகம் - 1 & 2)
6. ஸ்ரீ ராம்! ஜெயராம்!
7. கண்ணா! கார்மேக வண்ணா!
8. நவகோள் நாயகர்
9. நவராத்ரி நாயகியர்
10. ஸ்ரீ சக்ர நாயகி
11. என் தாயே ஈஸ்வரியே!
12. ஓம் சக்தியே! பராசக்தியே!
13. மாரி மகமாயி, காளி கருநீலி
14. அம்மன் பாமாலைகள்
15. செல்வமே! திருமகளே
16. ஜெய ஜெய சங்கர!
17. ஷீரடி செல்வம்

18. அருள் ஒளி
(ஸ்ரீ யோகிராம் சுரத்குமார் பாடல்கள்)
19. ஞாலம் போற்றிய ஞானியர்
20. மாதாவே! மரியே...!
21. மாசிலா ஏசு
22. மழலை செல்வங்கள் (குழந்தை பாடல்கள்)
23. நிலா நிலா ஓடிவா....! (1) (குழந்தை பாடல்கள்)
24. நிலா நிலா ஓடிவா....! (2) (குழந்தை பாடல்கள்)
25. தம்பி உன்னை நம்பி! (குழந்தை பாடல்கள்)
26. புகழோடு தோன்றுக (சான்றோர் பாடல்கள்)
27. காதல்! காதல்!
28. என் இரு விழிகள்
29. எண்ணிப் பார்க்கிறேன்
30. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 1)
31. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 2)
32. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 3)
33. பாத மலர்கள்
34. இசை மாலை
35. சாரல்
36. பொங்க புனல்
37. கங்குள் வெள்ளம்
38. இன்பத் தீ
39. செக்கர் வானம்
40. அன்னையடா அன்னை
41. வளரும் பயிர்
42. பொன்மாரி மொழிகள்
43. மலேசிய திருத்தலங்கள்



இருபதாம் நூற்றாண்டின் பக்தி இலக்கியப் படைப்பாளிகளில் குறிப்பிடத்தக்கவர். இவர் தனது பக்திப் பாடல்களால் தமிழிசைக்கு ஒரு புதிய எழுச்சியினை தோற்றுவித்தவர்......!

இருபதாம் நூற்றாண்டின் துவக்க ஆண்டுகளில், வேற்று மொழி கீர்த்தனைகளுக்கு, பாடலின் பொருள் விளங்காமல், வெறும் இராகத்திற்காகவும், இசைக் காகவும் தலையாட்டி வந்த தமிழ் மக்களுக்கு, எளிய மொழியில், இனிய தமிழில், தமிழிசையை அறிமுகம் செய்து வைத்தவர்......!

இவர்...

தமிழிசைக்கும், இறையுணர்விற்கும் இடையே பாலமாய் இருந்தவர்......!

உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் என்று அனைவராலும் அன்போடு அழைக்கப் பெறும் இவர் விருந்தோம்பலில் நிகரற்றவர்......!

ஏறக்குறைய நான்காயிரம் பக்தி இசைப் பாடல் களுக்கு மேல் இயற்றி சாதனை படைத்தவர்......!

இவர், திரை இசைப் பாடல்கள், மொழிமாற்றப் பாடல்கள், கவிதைகள், கவியரங்குகள், சிறப்புச் சொற் பொழிவுகள், பட்டிமன்றங்கள், பக்திப் பாடல்கள், தனிப் பாடல்கள் இயற்றுதல் போன்ற பல சிறப்புத் திறன்களைக் கொண்ட பன்முக ஆளுமை படைத்தவர்.

நெய்தல்
பதிப்பகம்